بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/07/2023 அன்று U.K ஆல்டனில் உள்ள ஹதீகத்துல் மஹ்தியில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஆண்டு மாநாட்டின் பணியாளர்களுக்கும், விருந்தினர்களுக்கும் பொன்னான அறிவுரைகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۞

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۞ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۞ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۞

இன்று அல்லாஹ்வின் அருளால் யூ.கே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. கிலாஃபத் இங்கு இருக்கும் நிலையில் இங்கு ஆண்டு மாநாடு நடைபெற ஆரம்பித்து, தற்போது வரை 40 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆரம்பத்தில் விரிவான ஏற்பாட்டின் காரணத்தினால் இங்கு உள்ள ஜமாஅத்திற்கு நிறைய கற்பிக்க வேண்டியது இருந்தது. அதற்காக ஹஸ்ரத் நான்காவது கலீஃபதுல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தமது சொந்த ஆர்வத்துடனும் வழிகாட்டல் வழங்கினார்கள். ரப்வாவில் இருந்தும் மக்களை இங்கு வரவழைத்து வேலை கற்பித்தார்கள். அவர்களில், ஆண்டு மாநாட்டின் ஆஃபிசராக இருந்த மதிப்பிற்குரிய சௌத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் அவர்களும் அடங்குவார்கள். அன்னார் பெரும் ஒத்துழைப்பு நல்கினார்கள்.

1985 இல் இங்கு கிலாஃபத் இருக்கையில் முதல் மாநாடு நடை பெற்றது. இருப்பினும் அதற்கு முன்பு 1984 இலும் மாநாடு நடை பெற்றது. ஆனால் அது மிகவும் சுருக்கமானதாக இருந்தது. 1985 இல் கணிசமாக 5000 மக்கள் கலந்துகொண்டனர். அப்பொழுது கூட ஏற்பாட்டாளர்களுக்கு இந்த அனைத்து ஏற்பாடுகளையும் எவ்வாறு செய்வது என்ற கவலை இருந்தது. ஆனால் தற்போது கிளை அமைப்புகளின் இஜ்திமாக்களில் அதைவிட பன்மடங்கு அதிகமான எண்ணிக்கையில் வருகை இருக்கின்றது. மேலும் கிளை அமைப்புகள் சிறப்பான முறையில் எல்லா ஏற்பாடுகளையும் தாமே நிர்வகிக்கின்றன. இந்த அடிப்படையில் தற்பொழுது யூ.கே-வின் ஜமாஅத் மிகவும் தேர்ச்சி பெற்றதாக ஆகி விட்டது. இருப்பினும், இப்பொழுது மூன்று நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு முழுமையாக பெரிய அளவில் மாநாடு மறுபடியும் நடைபெறுகிறது. ஆகையால் 40 ஆயிரத்தை விட அதிக மக்கள் வருவார்கள் என்று ஏற்பட்டாளர்கள் எதிர்பார்த்து, அவர்களை மிகச் சிறந்த முறையில் கவனிக்க முடியுமோ, இல்லையா என்கிற சிறிய கவலையில் உள்ளார்கள். ஆனால், இறைவனின் அருளால் இங்கு உள்ள

பணியாட்கள் மிகச் சிறந்த முறையில் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று வரை உள்ள பணிகளை நான் அன்று ஆய்வும் செய்திருந்தேன். அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு துறையிலும் ஊழியர்களை மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாகவும் பணியை அறிந்தவர்களாகவும் நான் கண்டேன். அப்போது இருந்த கவலையை அல்லாஹ் தூரமாக்கியும் விட்டான். அல்லாஹ் நம்முடைய இந்த கவலைகளை எப்பொழுதும் தூரமாக்கி விடுவான். நிபந்தனை என்னவென்றால், நாம் அவனுடைய அருட்களை ஈர்க்கக் கூடியவர்களாக ஆக வேண்டும். நம்முடைய வேலைகள் நம்முடைய எந்த திறமையினாலேயோ அல்லது அனுபவத்தினாலேயோ முழுமை அடைவது இல்லை. மாறாக, அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே நிறைவு பெறுகின்றன.

கடந்த குத்பாவிலும் நான் ஊழியர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டி இருந்தேன். அதாவது, உழைப்பு, உயர்வான ஒழுக்கம் மற்றும் துஆவின் மூலமாக அல்லாஹ்விடம் உதவியை நாடியவாறு ஒவ்வோர் ஊழியரும், ஒவ்வொரு மேற்பார்வையாளரும் தமது பணியை செய்ய வேண்டும். மறுபடியும் நான் ஊழியர்களுக்குக் கூறுகின்றேன்: நீங்கள் அனைவரும் எந்த உணர்வுடன் இந்த டியூட்டிகளை செய்வதற்காக முன் வந்தீர்களோ, அதே உணர்வை நிலை நிறுத்த வேண்டும். எத்தனை நாட்கள் டியூட்டி இருக்கின்றதோ இந்தத் தொண்டை நிறைவேற்றுங்கள். இதே போன்று இந்த விஷயத்தையும் உங்கள் கண்முன் நிறுத்துங்கள். அதாவது, டியூட்டியுடன் சேர்த்து நாம் அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையையும் நிறைவேற்ற வேண்டும். நம்முடைய தொழுகைகளையும் பாதுகாக்க வேண்டும். நம்முடைய ஆன்மாவைத் தூய்மையாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதே போன்று இன்று நான் மாநாட்டிற்கு வருகை தந்துள்ள விருந்தினர்களுக்கும் சில விஷயங்களைக் கூற நினைக்கின்றேன்.

இந்த மாநாடு உலகத் திருவிழா ஒன்றும் இல்லை என்கின்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோளை மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். இது எல்லாவற்றிற்கும் முதலான, மிக முக்கியமான விஷயமாகும். இந்த மாநாட்டில் நாம் கலந்து கொள்வதற்கான ஒரு நோக்கம் உள்ளது. மேலும் அந்த நோக்கம் என்னவென்றால், நாம் நம்முடைய அறிவு, ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நிலைகளை மேம்படுத்த வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுடன் நேசத்தை உருவாக்க வேண்டும். எப்பொழுது இந்த விஷயங்களின் பக்கம் கவனம் இருக்குமோ, அப்பொழுது மாநாட்டின் ஏற்பாடுகளில் காணப்படும் சிறிய குறைகளின் பக்கம் நமது கவனம் திரும்பாது.

மாநாட்டில் கலந்து கொள்பவர் ஒவ்வொருவரும் மாநாட்டின் நேரத்தில் இங்கும் அங்கும் திரிவதற்கு பதிலாக, மாநாட்டின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை உறுதியாக்கிக் கொள்ளுங்கள். முழு கவனத்துடன் மாநாட்டின் நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். நிகழ்ச்சிகளின் இடைவெளியின் போதும்

உங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். கடைவீதிகளில் ஷாப்பிங் செய்வதற்காக சுற்றாதீர்கள். மாறாக, புத்தகங்களின் அரங்கங்கள் உள்ளன; அங்கு செல்லுங்கள். தலைமையக துறைகள் போன்றவை தங்களுடைய கண்காட்சிகளை வைத்துள்ளனர். அவற்றைப் பாருங்கள். மேலும் உங்களுடைய மார்க்க மற்றும் வரலாற்று அறிவை அதிகரித்துக் கொள்ளுங்கள். இவ்வளவு பெரிய மற்றும் தற்காலிக ஏற்பாட்டில் எவ்வாறு இருப்பினும் குறைகள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே, அவற்றை கண்டும் காணாமல் இருந்து விட வேண்டும்.

உதாரணத்திற்கு உணவுக்கான ஏற்பாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். குறித்த நேரத்தில் உணவுக்காக செல்ல முடியவில்லை என்றால், என்ன கிடைக்கிறதோ அதை சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். ரொட்டி சிறிது வேகாமல் இருந்தது என்றால் அல்லது கருகி இருந்ததென்றால் அவற்றை மிகவும் கட்டாயத்திற்குள்ளான நிலையில் மட்டும் விட்டு விடலாம். இல்லையென்றால் அதை சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். டிராஃபிக்குக்கான ஏற்பாடு உள்ளது; அதில் சில முறையீடுகள் வந்து விடுகின்றன. அதிலும் ஏற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மிக உயர்வான நல்ல ஒழுக்கத்தை காண்பிக்க வேண்டும்; மகிழ்ச்சிகரமான நடைமுறையை காண்பிக்க வேண்டும்; ஒருவர் மற்றவரை புன் சிரித்தவாறு சந்திக்க வேண்டும்; மற்றவர்களுக்காக தியாக உணர்வைக் காண்பிக்க வேண்டும். இவை பணியாட்களின் வேலை மட்டும் அல்ல; இன்னும் சொல்வதாயின், விருந்தினர்களும் குறிப்பாக இதை வெளிப்படுத்த வேண்டும். ஒழுக்கம் சிறந்ததாக இல்லை என்றால், பிறகு ஒன்றுமே இல்லை. நான் கடந்த முறை ஒரு ஹதீஸின் ஆதாரத்தைக் கூறியிருந்தேன். அதாவது, புன் சிரித்தலும் ஈமானின் பங்காகும்; சதக்கா ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

எதுவரையும் ஒருவருடைய உள்ளம் மென்மையாக ஆவது இல்லையோ, எதுவரை அவர் தன்னை ஒவ்வொருவரை விடத் தாழ்ந்தவராகக் கருதுவதில்லையோ, மேலும் எல்லா வித ஆணவங்களும் தூரமாவது இல்லையோ, அதுவரை அவர் உண்மையான முஃமினாக ஆக முடியாது. சமுதாயத்தின் தொண்டராக இருப்பது, கண்ணியத்திற்குரியவராக ஆவதற்குரிய அடையாளமாகும். ஏழைகளுடன் மென்மையாக நடந்து கொண்டு, பணிவுடன் பேசுவது இறை சன்னிதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான அடையாளம் ஆகும். தீமைக்கு நன்மையைக் கொண்டு பதில் தருவது நற்பேற்றின் அடையாளம் ஆகும். மேலும் கோபத்தை விழுங்கி விடுவது, கசப்பான பேச்சுக்களை விழுங்கி விடுவது ஆகியவை மிகவும் மேலான தைரியமாகும்.

ஆகையால், இந்த மூன்று நாட்களில் நாம் இந்த விஷயங்கள் படி அமல் செய்தோமேயானால், நாம் இதற்கு ஓரளவுக்கு பழக்கமாகி விடுவோம். மேலும் மீதமுள்ள நாட்களிலும் நம்முடைய வாழ்க்கையில், இந்த விஷயங்கள்படி நாம் செயல்பட முடியும். நம்மீது நம் சகோதரருக்கு முக்கியத்துவம் வழங்குவது சாதாரண விஷயம் ஒன்றும் அல்ல; இது மிக கடுமையான முயற்சியைக்

கொண்ட பணியாகும். ஆகையால் தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இது ஈமானுடன் தொடர்புடையது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

யாராவது என்னிடம் கடுமையாக பேசினார்கள் என்றால், நானும் அவருக்கு அவ்வாறே பதில் தந்தேன் என்றால், எனது நிலையின் மீது பரிதாபமே! நானோ அவருக்காக துஆ செய்ய வேண்டும். ஆகையால், இவைதான் அந்த போதனைகளாகும். மேலும் இந்தத் தூய சுற்று சூழலைத்தான் இஸ்லாம் உருவாக்க விரும்புகின்றது. ஒருவர், தான் நோயிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் பொழுதுதான் மற்றவர்களின் நோய்க்கு சிகிச்சை அளிக்க முடியும். எல்லாவிதமான தற்பெருமையும் விட்டுவிட வேண்டும். ஒருவர் மற்றவருடைய குறைகளை கண்டும்காணாமல் விட்டுவிடுங்கள். மேலும் அமைதியின் சூழலை உருவாக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். இந்த நிலையில், நாம் எந்த நோக்கத்திற்காக இங்கு ஒன்று கூடி உள்ளோமோ அதைப் பெற முடியும்.

சில நேரங்களில் கைகலப்புகள் உருவாகி விடும் சூழல் ஏற்பட்டு விடுகின்றன. உங்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் மாநாட்டிற்கு வராதீர்கள்! பார்க்கிங் தொடர்பாக ஒத்துழைப்பு தாருங்கள். அல்லாஹ்வின் விருப்பத்திற்காக இந்த நாட்களை கழித்தீர்கள் என்றால், மகிழ்ச்சியுடன் சகித்துக் கொண்டீர்கள் என்றால், அல்லாஹ் வேறு வகையில் அருள் செய்வான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சுற்று சூழலில் அமைதி, சமாதானத்திற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கும், பரப்புவதற்கும் இவ்வாறு கூறினார்கள்: தேவையுடையவர்களுக்கு உணவளியுங்கள். மேலும் நீங்கள் அறிந்தவர் அறியாதவர் என அனைவருக்கும் சலாம் கூறுங்கள்.

கோடிக்கணக்கான மக்கள் எவ்வாறானவர்களாக இருக்கின்றார்கள் என்றால், ரொட்டி கிடைத்தது என்றால் தங்குவதற்கு இடமில்லை. இஸ்லாத்தின் உடைய கட்டளை, பசித்தோருக்கு உணவளியுங்கள் என்பதாகும். இஸ்லாமிய நாடுகள் இந்த உண்மைத்துவத்தைப் புரிந்தால், இந்த நிம்மதியின்மையை தூரமாக்குவதற்கு முயற்சி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

பெருமானார் (ஸல்) அவர்கள் சலாம் கூற வலியுறுத்தியுள்ளார்கள். சலாம் நாவினால் கூறுவது மட்டும் அல்ல. மனிதன் உள்ளத்தில் இருந்து சலாம் கூறும் பொழுதுதான் அமைதியைப் பரப்புவதற்கு முயற்சி செய்வான். மற்றவரின் கஷ்டங்களை தூரமாக்குவதற்கு முயற்சி செய்வான். இந்த நாட்களில் ஒவ்வோர் அஹ்மதியும் அமைதியின் தூதுச் செய்தியை பரப்புவது, சலாம் கூறும் பழக்கத்தை உருவாக்குவது ஆகியவற்றிற்கு முயற்சி செய்ய வேண்டும்.

எவர்களிடமிருந்து பயன் கிடைக்கிறதோ அவர்களை மிக ஆர்வத்துடன் மக்கள் சந்திக்கிறார்கள். அல்லது யாரிடமாவது தொடர்பு இருக்கும் என்றால் அவரையும் மிக ஆர்வத்துடன் சந்திக்கிறார்கள். ஆனால், உள்ளத்தின் வெறுப்புகள் தூரமாகும் போதுதான், உள்ளத்திலிருந்து ஒருவர் மற்றவருக்காக அமைதிக்கான துஆ எழும்போதுதான், மாநாட்டின் சூழல் அமைதிக்கான சூழலாக ஆகிவிடும் போதுதான், இறைவனுடைய படைப்பினங்களுக்குத்

தொண்டு செய்வது நம்முடைய வாழ்வின் அங்கமாக ஆகிவிடும் போதுதான் உண்மையான அமைதி உருவாகும்.

*ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* மாநாட்டின் நிகழ்ச்சிகளை அமைதியாகவும் கவனத்துடனும் கேளுங்கள். மாநாட்டில் வந்து அமருங்கள். சிலருடைய உரைகள் சிறப்பான முறையில் ஆற்றப்படுவதனால் (மக்கள்) அமர்ந்து கேட்கின்றார்கள். சில உரைகள் கேட்கப்படுவதில்லை என்ற இந்த செயலை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விரும்பவில்லை. மாநாட்டின் நாட்களில் திக்ரே இலாஹி மற்றும் தரூது ஷரீஃப் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். இன்றைய நாட்கள் முஹர்ரம் மாதத்தின் நாட்களாகும்.

அல்லாஹ்வின் பெயரைக் கூறிக்கொண்டுதான் பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மீக மற்றும் பௌதீக சந்ததிகள் மீது அநீதி இழைக்கப்பட்டது. தற்போது இதே அநீதி பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மீக சந்ததிகள் மீதும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் அன்னாருடைய ஜமாஅத்தின் மீதும் செய்கிறார்கள். தற்போது பாகிஸ்தானில் மிகவும் கடுமையான சூழல் நிலவுகிறது. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தின் காரணத்தினால் செய்கின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் (அஹ்மதிகளாகிய) நமது ஈமானின் அடிப்படையே பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும், அன்னார் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்பதன் மீதும், அன்னார் கொண்டு வந்த ஷரீஅத் மீதும் உள்ளது.

பெருமானார் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கு லப்பைக் (நாங்கள் ஆஜராகி விட்டோம்) என்று கூறியவாறு நாம் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுள்ளோம். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் இதை எழுதி உள்ளார்கள்: நான் என்ன அடைந்தேனோ அது பெருமானார் (ஸல்) அவர்கள் மீதான நேசத்தினால் பெற்றேன்.

*மாநாடு தொடர்பாக ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் கூறினார்கள்:*

மாநாட்டுத் திடலில் பெண்கள் புரியும்திறன் கொண்ட குழந்தைகளுக்கு (மாநாட்டின்) நிகழ்ச்சிகளை கேளுங்கள் என்று புரிய வையுங்கள். நிகழ்ச்சி நிரலில் என்ன வழிகாட்டல்கள் எழுதப்பட்டுள்ளனவோ அவற்றின்படி நடங்கள். அல்லாஹ் எல்லா விதமான தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக! தன்னுடைய அருள்களின் மழையை பொழிய வைத்துக் கொண்டே இருப்பானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)